Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 4, Issue - 1, November 2024** **E-ISSN: 2583-0481**

# The Tradition of Saivasiddhanta Education in Sri Lanka

**Dr. N. Vaman,** Head & Senior Lecturer, Department of Hindu Civilization, Eastern University, Sri Lanka.
ORCiD: https://orcid.org/0000-0001-8679-0303
**DOI: 10.5281/zenodo.14250219**
**Received:** 20 August 2024; **Revised:** 30 October 2024; **Accepted:** 30 September 2024; **Available online:** 26 November 2024.

## Abstract

*Saiva Siddhanta is one of the Saiva philosophies that have its own unique tradition. 'Saiva' is a belief system while 'Ideology' is a process of trying to develop that belief into a real thought with an intellectual level. Therefore, Saiva Siddhanta philosophy is a philosophy that unites religious life and philosophy. There is no evidence that there was any time gap between the origin and development of Sri Lankan Saivism and Saivasiddhanta ideological traditions and the emergence and development of Tamil Nadu's Saivism and Saivasiddhanta ideological traditions. This fact can be realized by the epic literature such as "Ramayana", "Mahabharata", "Kandhapurana", "Mahavamsa" and other historical evidences showing that the primitive people of Sri Lanka are the people who worship Shiva Linga. Many books on Saiva ideology occupy a prominent place in Sri Lankan contributions to the development of Saivasiddhanta. Along with these, various activities have been carried out with the aim of popularizing Saivasiddhanta among people. Thus, Purana padanam (Epic enactment), Prasangam (Sermons), Kandanam (Critiques), Nadagam (Drama), Saivasiddhanta Education etc. are very significant. Nevertheless, this article examines the educational tradition of Saivasiddhanta in Sri Lanka.*

**Keywords:** Saivasiddhanta, Sri Lanka, Thinnai Palli, Education.

## References

[1] Kalaivani, E. *Eelattu Saivasiddhanta Apiviruttip Paṇiyil Ser. Pon. Ramanathan*. Department of Hindu Civilization, University of Jaffna, 2009.
[2] Karthikesu, K. *Sivapathasundaranar Samayanery*. Puloliyur Saiva Periyar Sivapadasundhara Centenary Commemoration, Sivapadasundara Centenary Council, Jaffna, 1978.
[3] Vaithiyalingam, M. "Panditamani and Religious Propaganda." *Pandithamani Ninaivu Malar*, Ilakiya Kalanithi Pandithamani C. Kanapathipillai Book Publishing House, Urumbrai, Jaffna, 1989.
[4] Vedanathan, M. (Ed.), "Savism ideals and contribution of Sri Lankans." *International Saivism Conference*, University of Jaffna, 2017.
[5] Kandiah, M. "Traces of the Jaffna Scientific Genius in the Development of Saiva Siddhanta." *Tiruvati Lilavati Ramanathan Memorial*, Sivathambi Institute of Tamil Studies, Colombo, 1994.
[6] Jebenesan, S. *Modernization of Tamil and Americanization*, Kumaran Books, Colombo, 2007.
[7] Kandiah, M. "Eezhatuch Saivasiddhanta Ancient Excellences." *Sivatamil Research Papers*, Thellipalai Sri Durkadevi Devasthanam, Jaffna, 1985.
[8] Prasanthan, S., *Satavathani Na.Kathiraivellai*, Colombo Tamil Society, Colombo, 2009.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** Nil
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

மலர் - 4, இதழ் - 1, கார்த்திகை 2055 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# இலங்கையில் சைவசித்தாந்தக் கல்வி மரபு

**கலாநிதி நா. வாமன்,** தலைவர், சிரேஷ்டவிரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
ORCiD: https://orcid.org/0000-0001-8679-0303
DOI: 10.5281/zenodo.14250219

**ஆய்வுச் சுருக்கம்**

*சைவ மெய்யியல்களில் ஒன்றான சைவசித்தாந்தம் தனக்கெனத் தனிப் பாரம்பரியத்தை உடையது. 'சைவம்' என்பது நம்பிக்கையுணர்வுசார் நெறி எனில் 'சித்தாந்தம்' அந்த நம்பிக்கையுணர்வினை அறிவுநிலையுடன் கூடிய மெய்யியற் சிந்தனையாக உருவாக்கம் செய்யும் முயற்சியின் செயற்றிட்டமாகும். எனவே சைவசித்தாந்த மெய்யியலானது சமய வாழ்வையும், தத்துவத்தினையும் ஒன்றிணைக்கும் மெய்யியற் சிந்தனையாகும். இலங்கைச் சைவ சமய, சைவ சித்தாந்த மரபுகளின் தோற்ற வளர்ச்சிகளுக்கும், தமிழகத்துச் சைவ சமய, சைவ சித்தாந்த மரபுகளின் தோற்ற வளர்ச்சிகளுக்குமிடையே காலவிடைவெளிகள் எதுவும் இருந்ததற்கான ஆதாரங்கள் இல்லை. இவ்வுண்மையினை, இராமாயணம், மகாபாரதம், கந்தபுராணம், மகாவம்சம் முதலான இலக்கியங்களும், பிற வரலாற்றுச் சான்றுகளும், இலங்கையின் ஆதிக்குடிகள் இலிங்க வழிபாட்டையுடைய மக்கள் என எடுத்துக்காட்டுவதன் மூலம் உணர்ந்துகொள்ள முடிகின்றது. சைவசித்தாந்த வளர்ச்சிக்கு இலங்கையரின் பங்களிப்புக்கள் என்ற வகையில் நூல்கள் பிரதான இடம் பெறுகின்றன. இவற்றுடன், சைவசித்தாந்தத்தை மக்கள்மயப்படுத்தும் நோக்கில் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன. அவ்வகையில் புராணபடனம், பிரசங்கம், கண்டனம், நாடகம், சைவசித்தாந்த கல்வி முதலானவை குறிப்பிடத்தக்கவை. இவற்றுள் சைவசித்தாந்தக் கல்வி மரபு குறித்து ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.*

**முக்கியச் சொற்கள்:** சைவசித்தாந்தம், இலங்கை, திண்ணைப் பள்ளி, கல்வி.

**அறிமுகம்**

இலங்கைத் தமிழ்ச் சூழலில் அதிக செல்வாக்கைப் பெற்ற தத்துவமாக சைவசித்தாந்தம் விளங்குகின்றது. இலங்கையின் தொன்மைச் சமயங்களில் ஒன்றாகச் சைவம் விளங்குவது போல மெய்யியல்களுள் ஒன்றாகச் சைவசித்தாந்தம் விளங்குகிறது. இலங்கையில் இதுவரை நடத்தப்பட்ட ஆய்வுகள், கிடைக்கப்பெற்ற ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது சைவசித்தாந்தம் தொடர்பான கருத்துத் தொடக்கத்தினை கி.பி 17ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்தவரான யாழ்ப்பாணத்துத் திருநெல்வேலி ஞானப்பிரகாச முனிவரிடத்திலேயே காணமுடிகின்றது. இலங்கைத் தமிழ் மக்களது சைவசித்தாந்த வரலாற்றை

முறைப்படி ஆரம்பித்து வைத்ததுடன் நில்லாது அவர்களுக்குச் சைவசித்தாந்தக் கல்வியில் பெரும் ஈடுபாட்டை ஏற்படுத்தவும் ஞானப்பிரகாசர் காரணமாக அமைந்துள்ளார்.

சைவசித்தாந்தச் செல்நெறியில் இலங்கையரின் பல்வகைமைச் செயற்பாடுகள் எனும் விடயத்தின் வழி சைவசித்தாந்தத்தை மக்கள்மயப்படுத்தும் நோக்கில் பல்வேறு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. புராணபடனம், பிரசங்கம், கண்டனம், நாடகம், சைவசித்தாந்த வகுப்புக்கள் முதலானவை குறிப்பிடத்தக்கவை. இலங்கைத் தமிழரின் பாரம்பரியங்களில் ஒன்றாக இருந்து வளர்ச்சியடைந்த, கல்விமரபுகளில் சைவசித்தாந்தக் கல்வி பிரதானமானது. நவீன பாடசாலைக் கல்விமுறைகள் வளர்ச்சியடையாத காலத்தில் குருகுலக்கல்வி, திண்ணைக்கல்வி போன்ற கல்விமரபுகள் சைவசித்தாந்தக் கருத்தியலை அடிப்படையாகக் கொண்ட சமயக்கல்விக்கு முதன்மையளித்துள்ளமையினை வரலாற்றால் அறிய முடிகின்றது. சைவசித்தாந்தக்கல்வி மரபு இலங்கையில்; திண்ணைப் பள்ளிகள் மற்றும் மடங்களின் ஊடாக, குருகுலக்கல்வி மரபில் வளர்ச்சியடைந்து வந்துள்ளது. திண்ணைப் பள்ளிகள் பெரும்பாலும் ஒரு மரத்தடியில் அல்லது வீட்டுத்திண்ணையில் நடைபெற்றுவந்தன. மாணவர்கள் நிலத்தில் சப்பாணிகட்டி உட்கார்ந்து தமக்கு முன்னால் பரப்பப்பட்டிருந்த புழுதிமணலில் எழுதக் கற்றுக்கொள்வார்கள். ஏட்டுச்சுவடிகளிலுள்ள எழுத்துக்களை அடையாளம் காணும் திறன் ஏற்படும்வரை இத்தகைய படிப்பு தொடர்ந்துகொண்டேயிருக்கும். (எஸ்.ஜெபநேசன்,2009:19) மேலும் இவற்றில் நைடதம், மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், நிகண்டு, வைத்தியம், சோதிடம் என்பனவும் போதிக்கப்பட்டன எனத்தெரிகிறது. (மேலது:19) இவற்றுடன் சமய சாஸ்திரங்கள், சமஸ்கிருத நாகர, கிரந்த எழுத்துக்கள் என்பனவும் கற்பிக்கப்பட்டன.

ஆறுமுகநாவலராலும், அவரது மரபினராலும் சைவ எழுச்சியுடன் உருவாக்கப்பட்ட நவீன பாடசாலைக் கல்வித்திட்டமுறை, இலங்கை அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்கும் வரை சைவசித்தாந்தக்கல்வி வளர்ச்சிக்குப் பெரும் உந்துதலாக அமைந்தது. தனி ஆளுமைகளாலும், சைவசமய நிறுவனங்களாலும் இச்சைவசித்தாந்தக் கல்வி முன்னெடுக்கப்பட்டது. சைவசித்தாந்த வகுப்புக்களை நடத்துவதில் பலர் ஆர்வம் செலுத்தினாலும், சேர் பொன்.இராமநாதன், த.கைலாசப்பிள்ளை, நா.கதிரைவேற்பிள்ளை, சைவப்பெரியார் சு.சிவபாதசுந்தரனார், ம.வே.திருஞானசம்பந்தப்பிள்ளை, பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை ஆகியோரின் பங்களிப்புக்கள் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் கொள்ளப்படுகின்றன.

**சேர் பொன். இராமநாதன்**

சேர் பொன். இராமநாதன் சைவப் பிள்ளைகள் சைவச்சூழலிலேயே கற்க வேண்டும் என்ற நாவலரின் கொள்கையை பின்பற்றிச் செயற்பட்டவராவார். இவர் சைவப் பெண்பிள்ளைகளுக்காக ஆசியாவிலே நிறுவப்பட்ட கிறிஸ்தவ சமயச் சார்பற்ற முதலாவது பெண்கள் கல்லூரியாகிய இராமநாதன் பெண்கள் கல்லூரியை 1913இல் யாழ்ப்பாணம்

மருதனார் மடத்தில் நிறுவிய பெருமைக்குரியவர். இக்கல்லூரியின் வகுப்பறைகளின் மேல்மாடியில் 1000 மாணவர்கள் நின்று வழிபடக்கூடிய மண்டபத்தோடு கூடிய நடராஜர் ஆலயத்தையும் அவர் அமைத்துக் கொடுத்தமை சைவசித்தாந்தத்தின்பால் அவர் கொண்டிருந்த ஆறாக்காதலை வெளிக்காட்டுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

மிஷனரிகளின் செயற்பாடுகளுக்கு எதிராகச் சைவத்தை நிலைநாட்ட நிறுவப்பட்ட இக்கல்லூரி சைவக் கல்வியை பெண் பிள்ளைகளுக்கு ஊட்டுவதில் முன்னின்றுழைத்தது. அதேபோல ஆண்களுக்கும் ஒரு சைவப்பாடசாலை தேவை என்பதையுணர்ந்த இவர், 1921ஆம் ஆண்டு யாழ்.திருநெல்வேலியில் பரமேஸ்வராக் கல்லூரியை நிறுவி சைவப் பணிபுரிந்தார். இவ்விரு கல்லூரிகளிலும் சிலகாலம் சைவசித்தாந்தம் பற்றிய கருத்துரையாடல்களும், ஆசிரியப் பயிற்சியும் இடம்பெற்றதாக அறியப்படுகின்றது. (வேதநாதன், மா., 2017: 1164)

இராமநாதனால் உருவாக்கப்பட்ட பரமேஸ்வராக் கல்லூரி பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாகப் பரிணமித்தது. அங்கு இந்துநாகரிகத்துறை, மெய்யியல் துறை, சைவசித்தாந்தத் துறை என்பன ஆரம்பிக்கப்பட்டு சைவக் கல்வியும், சைவசித்தாந்தக் கல்வியும் வளர்தெடுக்கப்பட்டன. உலகப் பல்கலைக்கழகங்கள் எதிலும் இல்லாத வகையில் இந்துநாகரிகத்திற்கென தனியொரு துறையாக, இந்துநாகரிகத்துறையை ஆரம்பித்து யாழ்ப்;பாணப் பல்கலைக்கழகம் சிறப்புப் பெறுவதற்கும், சைவசித்தாந்தத்தை ஒரு கலாசார ஊடகமாக நிலைபெறச் செய்வதற்கும் இராமநாதனின் தீர்க்க தரிசனமான கல்விச் செயற்பாடுகளே காரணமாய் அமைந்தன. (கலைவாணி, இ., 2009:18)

**த. கைலாசப்பிள்ளை**

நாவலரின் வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையின் முகாமையாளர் பொறுப்பை 1910இல் ஏற்ற கைலாசப்பிள்ளை, பின் 1917ஆம் ஆண்டு; அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த வேளையில் இவ்வித்தியாசாலையின் ஒரு பகுதியிலே அரசினரது உதவியோடு ஒரு காவியப் பாடசாலையையும் அமைத்து சைவசித்தாந்த வகுப்பினை நடத்தினார். இதன் நோக்கம் அப்பணிகளை மாணவர்கள் எதிர்காலத்தில் முன்னெடுக்க வேண்டும் என்பதேயாகும். அந்த நோக்கம் கைலாசப்பிள்ளை அவர்கள் வாழ்ந்த சமகாலத்திலேயே வெற்றி கண்டது. பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை, க.குருமூர்த்தி ஐயர், பண்டிதர் சி.கதிரிப்பிள்ளை, அச்சுவேலி குமாரசுவாமிக் குருக்கள் முதலிய பதினெண்மர் பயின்று, பின்நாட்களில் தம் வாழ்வை சைவத்திற்காகவும், சைவசித்தாந்தத்திற்காகவும் அர்ப்பணித்து பணியாற்றியமை முக்கிய விடயமாகும். 1889இல் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி உயர்நிலைப் பாடசாலையாக தோற்றுவிக்கப்பட்டது. இக்கல்லூரியின் தோற்றத்திற்கு அடித்தளமிட்டவர்களுள் த. கைலாசப்பிள்ளையும் குறிப்பிடத்தக்கவொருவராவார். இக்கல்லூரியில் சிலகாலம் சைவசமய, சித்தாந்தப் பாடநெறிகளை அவர் கற்பித்ததாகவும் அறியப்படுகின்றது.

**சதாவதானி நா. கதிரைவேற்பிள்ளை**

ஆரம்பத்தில் புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலையில் உதவியாசிரியராகப் பணிபுரிந்த கதிரைவேற்பிள்ளை அவர்கள், பின் 1897ஆம் ஆண்டிலிருந்து தன் தமிழ் ஆசிரியப் பணியை வேப்பேரி உயர்நிலைப் பள்ளியிலும், சென்தோம் உயர்நிலைப் பள்ளியிலும் செவ்வனவே மேற்கொண்டு வந்ததோடு, மரபுத் தமிழ் குருகுலப் பாரம்பரியத்திலும் பல மாணவர்களுக்கு ஆசிரியராக விளங்கி சைவத்தையும், சைவசித்தாந்தத்தையும், வாழ்வியல் அறங்களையும் விளக்கும் நூல்களைப் போதித்து வந்துள்ளார். நிறுவன மயப்பட்ட பாடசாலைக் கல்விப் போதனைகளின்போதும், குருகுலக் கல்விப் போதனைகளின்போதும் திறமைமிக்க ஆசிரியராக விளங்கி மாணவர்களை வளப்படுத்தினார் என்பர். இவரிடம் கல்வி கற்றுக்கொண்ட மாணவர்கள் பின்நாட்களில் இவரைப் பற்றி கூறிய குறிப்புக்களிலிருந்து இவரின் கற்பித்தல் ஆளுமையை அறிந்துகொள்ள முடிகின்றது. பல மரபுத் தமிழ் நூல்களையும், சித்தாந்த நூல்களையும், யாப்பியலையும், கற்பித்த இவரிடமிருந்து கண்டனநுட்பத்திறத்தையும் மாணவர்கள் பெற்றுக்கொண்டார்கள். மாணவர்கள் விரும்புகின்ற துறையிலேயே அவர்களை வழிநடத்தும் எண்ணம் கொண்டிருந்த பிள்ளையவர்கள் திரு.வி.கல்யானசுந்தரமுதலியாரை (திரு.வி.க) உரைநடைப் பயிற்சிக்கென பெரிய புராணக் கதைகளை மீளமீள எழுதும்படி ஆற்றுப்படுத்தினார் எனவும், அக் காரணத்தினாலேயே அவர் சிறந்ததொரு பெரியபுராண அறிஞராகவும், நற்றமிழ் நடை வல்லுநராகவும் உருவாகமுடிந்தது எனவும் அவரே கூறியிருப்பதனைத் திரு.வி.க அவர்களின் குறிப்புக்களிலிருந்தே அறியமுடிகின்றது.

**சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரனார்**

கிராமங்களிலே சைவப் பள்ளிக்கூடங்களைத் தாபிப்பதில் முன்னின்று செயற்பட்ட சிவபாதசுந்தரனார், அன்றைய அரசாங்கத்தின் கல்விப் பகுதியில் தனக்கிருந்த செல்வாக்கினைப் பயன்படுத்தி சைவத் தமிழ்ப் பாடசாலைகள் தோறும் சைவசமய சித்தாந்தக் கல்வி நிரந்தரமாக இடம்பெறவும், கல்லூரி உயர் வகுப்புப் பரீட்சைகளுக்கு சைவசமயப் பண்பாடும், சைவசித்தாந்தமும் பாடமாக அமையவும் வழிசமைத்தார். இவரது முயற்சிகளால் இன்று இலங்கைப் பல்கலைக்கழகங்களில் இந்துநாகரிகம், இந்து மெய்யியல் முதலிய அறிவுத் துறைகள் உருவாக்கப்பட்டு பெரும்பாலாண சைவ மாணவர்கள் சைவசித்தாந்தத்தையும், சைவத்தையும் கற்கும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளமை சிறப்பாகும். (வேதநாதன், மா., 2017: 1132)

தான் பேசுவதொன்று, செய்வதொன்று என்றில்லாது தான் பேசும் சைவசித்தாந்த உண்மைகளையே வாழ்விலும் கடைப்பிடித்து சித்தாந்த சமய வாழ்வு வாழ்ந்து அதனையே தன்னுடைய மாணவ பரம்பரைக்கும் போதித்தருளினார் சைவப்பெரியார். எதுவித கல்வியறிவும் இல்லாத மாணவர்களைக்கூட தன் அபார திறமையால் சைவசமயிகளாகவும், சித்தாந்திகளாகவும் மாற்றியமைத்தார் என்பர். இதனால் இவரிடம் நாடெங்கிலுமிருந்தும்

அவ்வாறான பிள்ளைகளே கொண்டு வந்து சேர்க்கப்பட்டார்கள். இவர் அதிபராகவிருந்த விக்டோறியாக் கல்லூரி ஏனைய கல்லூரிகளைப் போல் அல்லாது சீர்திருத்தக் கழகமாகவும் விளங்கியது. கல்வியோடு, சமயப் போதனைகளும் இடம்பெற்றதாகக் குறிப்பிடப்படுகின்றது. மறுபிறப்புத் தூஷண பரிகாரம், சைவபோதம் - 2அம் பாகம், கந்தபுராணச் சுருக்கம், உளநூல், அகநூல், திருவருட்பயன் விரிவுரை, சைவக்கிரியை விளக்கம், திருப்பெரு வடிவம், சைவசித்தாந்த ஆங்கில மொழி பெயர்ப்பு நூல்கள் முதலியவை மாணவர்களின் சந்தேகங்களை போக்கும் நோக்கிலேயே எழுதப்பட்டவை என்பர். அவரது கற்பித்தல் முறை தொடர்பாக க. கார்த்திகேசு மேல்வருமாறு குறிப்பிடுவார். (1978: 09) மேலும்,

“மாணவர்களுக்கான வகுப்பு நேரங்களில் மாணவர்களிடம் சில வினாக்களை வினவுவார்கள். மாணவர்களிடமிருந்த பதில்கள் வராதவிடத்து சற்றுச் சிந்தித்துச் சொல்லுங்கள் என்று கூறி மாணவர்களின் சிந்தனையைத் தூண்டுவார்கள். அதில் பதில் கிடைக்காதவிடத்து தானே தருக்க ரீதியான விடையைக் கூறி முடிப்பார்கள். சமய பாட வகுப்புக்களும் இவ்வாறே அமைந்தன. சமய பாட வகுப்புக்களில் கேட்கும் கேள்விகளுக்கு விடையாக சைவசித்தாந்த உண்மைகளே வந்து நிற்கும் என்று குறிப்பிடும் அவர் மேலும், “நாம் மனிதர்களாகப் பிறந்தது ஏன்? தக்க பதில் வேண்டும் யோசித்துச் சொல்லுங்கள்? (மாணவர்கள் திகைத்து நிற்பர்) என்ன யோசித்து நிற்கின்றீர்கள்? இது தெரியாதா? கூத்துக்கள், படக்காட்சிகள், வானவிளையாட்டு, சதிர் விளையாட்டு முதலிய காட்சிகளைக் கண்டு களிக்கவா? அல்லது மேளக் கச்சேரி, சங்கீதம், முதலிய இன்னிசைகளைக் கேட்டு மகிழவா? அல்லது நல்ல சென்ரு முதலிய வாசனைத் திரவியங்களை முகந்து இன்புறவா? அன்றி நல்ல ஆடையாபரணாதிகளை அணிந்து மகிழவா? அல்லது ஆடு, கோழிகளைப் பலியிட்டு அவற்றின் ஊனை உண்டு சுகிக்கவா? இன்றேல் “கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு மொண்டொடி கண்ணே யுள” என்ற பொய்யாமொழி பொருண்மைக்கு எற்ப மங்கையர் போகத்தை நுகர்ந்து சுகிக்கவா? இவற்றுள் எதற்காக என்று எண்ணுகின்றீர்கள்?” என்று மாணவர்களைத் தூண்டி கேள்வி கேட்பார். புலால் உண்ணுதல் முதலான மேற்கூறிய விடயங்களைச் செய்யும் சில மாணவர்கள் தாம் செய்வது தவறே என்று உள்ளப்பூர்வமாக எண்ணும்படியான நாசூக்கான பேச்சாக அவரது பாடம் அமையும். அக் கேள்விகளுக்குப் பின் தானே சைவசித்தாந்தக் கண்ணோட்டத்தில் நின்று விடை பகர்வார். அது மாணவர்களுக்கு மிகவும் விளங்கக்கூடியதாக அமையும்.” (சைவப்பெரியார்) என்கிறார்

**ம.வே.திருஞானசம்பந்தப்பிள்ளை**

சைவப்பெரியார் சு.சிவபாதசுந்தரனாரிடம் கல்வி பயின்ற அவரது மருமகனான ம.வே.திருஞானசம்பந்தப்பிள்ளை பின்னாட்களில் மாணவர்களுக்கு சைவசித்தாந்தக் கல்வியை போதித்தவராகக் குறிப்பிடப்படுகின்றார். யாழ். இந்துக் கல்லூரியில் உருவான இளைஞர் கழகத்தை ஆரம்பத்தில் வழிநடத்திய பிள்ளை, அவ்விளைஞர் கழகத்தை சைவப் பணியாற்றும்

கழகமாக மாற்றத் தலைப்பட்டார். மேற்கத்தேயர்கள் மத்தியில் சைவசித்தாந்த வாழ்வியலையும், சித்தாந்தக் கருத்துக்களையும் கொண்டு சேர்க்க ஆங்கில மொழியூடான கல்வி முறை அவசியம் எனவுணர்ந்த பிள்ளை தானும் ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றதோடு இளைஞர் கழகத்திலும் ஆங்கிலத்தைப் போதித்து அவர்களையும் வழிகாட்டினர் என்பர்.

**பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை**

நாவலரின் மரபு வழியில் வந்தவரான பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை சைவசித்தாந்த வகுப்புக்களை நடாத்திய ஒருவராவார். பொ. கைலாசபதியும், அச்சுவேலி மு. வைத்தியலிங்கமும் இவருடைய சமகால நண்பர்களாக அறியப்படுகின்றார்கள். அச்சுவேலி மு. வைத்தியலிங்கம் அவர்கள் பண்டிதமணியைப் பற்றிக் குறிப்பிடுகையில்,

> **ஆரம்பத்தில் தமிழிலக்கியத்தோடும், இலக்கணத்தோடும், காலம்போக்கிய பண்டிதர் அவர்கள் பின்னர் சமயப் பிரசாரகர் என்ற பெயரில் தொழிற்படா விட்டாலும் தன்னாலியன்றதைச் செய்தார். வீட்டிலே சைவசித்தாந்த வகுப்புக்களை நடாத்தினார், சமயக் கட்டுரைகளையும், சமய நூல்களையும் எழுதினார். சமயம் சம்பந்தமான பிரசங்கங்களையும் செய்தார் (வைத்தியலிங்கம், மு., 1989: 60)**

எனக் குறிப்பிடுகின்றார். இவருடைய இக்கூற்றிலிருந்து பண்டிதமணி வீட்டிலேயே திண்ணைப் பள்ளியைத் தொடங்கி அங்கு சைவசித்தாந்த வகுப்புக்களை நடாத்தி வந்தார் என்பது அறியப்படுகிறது. பிற்காலங்களில் இவர் வீட்டையே ஆச்சிரமமாக ஒன்றை உருவாக்கி அவ்வாச்சிரமத்திலும் சைவசித்தாந்த வகுப்புக்களை நடாத்தியுள்ளார். வாரந்தோறும் வரும் ஞாயிற்றுக் கிழமைகளில் இவ்வகுப்புக்கள் இடம்பெற்றன. இங்கே சிவஞானபோதம் முழுவதும் உரையுடன் போதிக்கப்பட்டது. இந்த சித்தாந்த வகுப்பில், சாதாரண மாணவர்களைக் காட்டிலும், பண்டிதர்கள், பட்டதாரிகள், அப்புக்காத்துமார் முதலியோரே அதிகமாகச் சித்தாந்தம் கற்றார்கள். மாணவர்களுக்குச் சைவசித்தாந்தம் கற்பிக்கத் தொடங்கியதைத் தொடர்ந்து மிகப் பெரியதொரு சித்தாந்தியாக உருமாறினார் பண்டிதமணி. இவரது சித்தாந்த ஆளுமையினைக் கேள்வியுற்ற இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் இவரது சைவசித்தாந்த ஆச்சிரமத்திற்கு அவரைத் தேடிச் சென்று சைவசித்தாந்த உண்மைகளைக் கேட்டு அதனை ஒலிப்பதிவு செய்து தங்கள் வானொலியில் அத்வைத சிந்தனை என்ற தலைப்பில் ஒலிபரப்புச் செய்தார்கள் என்பதும் முக்கிய விடயமாகும்.

**முடிவுரை**

சைவசித்தாந்தத்தை மக்கள்மயப்படுத்தும் சிறந்த நோக்கில் பல்வேறு செயற்பாடுகள் சைவசித்தாந்த அறிஞர்களால் இலங்கையில் முன்னெடுக்கப் பட்டுள்ளன. அவ்வகையில் இவ்வறிஞர்கள் மிக முக்கிய சைவத்தொண்டாற்றியவர் ஆவர்.

**குறிப்புகள்**

[1] கலைவாணி, இ. *ஈழத்து சைவசித்தாந்த அபிவிருத்திப் பணியில் சேர்.பொன். இராமநாதன்.* இந்துநாகரிகத் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 2009.

[2] கார்த்திகேசு, க, *சிவபாதசுந்தரனார் சமயநெறி, புலோலியூர் சைவப் பெரியார் சு.சிவபாதசுந்தரனார் நூற்றாண்டு விழாமலர்.* சிவபாதசுந்தரனார் நூற்றாண்டு விழாச் சபை, யாழ்ப்பாணம், 1978.

[3] வைத்தியலிங்கம், மு. "பண்டிதமணியும் சமயப் பிரச்சாரமும்." *பண்டிதமணி நினைவு மலர்,* இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை நூல் வெளியீட்டுச் சபை, உரும்பிராய், யாழ்ப்பாணம், 1989.

[4] வேதநாதன், மா. (பதி.), "சைவசித்தாந்த மேன்மைகளும் இலங்கையரின் பங்களிப்பும்." அனைத்துலகச் சைவமாநாடு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 2017.

[5] கந்தையா, மு. *சைவசித்தாந்த விளக்க விருத்தியில் யாழ்ப்பாண அறிவியல் மேதையின் சுவடுகள். திருவாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரை,* தமிழியல் கற்கைக்கான சிவத்தம்பி நிலையம், கொழும்பு, 1994.

[6] ஜெபநேசன், எஸ். *தமிழின் நவீனமயவாக்கமும் அமெரிக்கமிஷனும்.* குமரன் புத்தக இல்லம், கொழும்பு, 2007.

[7] கந்தையா, மு. "ஈழத்துச் சைவசித்தாந்த தொன்மை மேன்மைகள்." *சிவத்தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள்,* தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், யாழ்ப்பாணம், 1985.

[8] பிரசாந்தன், ஸ்ரீ. *சதாவதானி நா. கதிரைவேற்பிள்ளை.* கொழும்புத் தமிழ்ச் சங்கம், கொழும்பு, 2009.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.